# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.

## O.S. NO. 209/2022

**02.11.2023 - வா.சா. 1 சங்கீதா சத்திய பிரமாணத்தின் பேரில் 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னுடைய விலாசமும், என் தகப்பனாரின் விலாசமும் கதவு இலக்கம் 319/2 ஈச்சந்தோப்பு, நாகப்பாடி கிராமம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கடந்த 10 ஆண்டு காலமாக என் தகப்பனார் எங்கள் குடும்பத்தை விட்டு பிரிந்து இருக்கிறார். அவர் எந்த இடத்தில் வசிக்கிறார் என்று எனக்கு தெரியாது. நீதிமன்றத்தில் இருந்து அனுப்பப்பட்ட அழைப்பாணையை அவர் எங்களுடைய விலாசத்தில் இருந்து பெற்று கொண்டுள்ளார் என்றால் அதனை பற்றி எனக்கு தெரியாது. நாங்கள் ஒரே குடும்பமாகத் தான் இருந்து வருகிறோம் என்றால் சரியல்ல.

என் தாத்தா பாண்டுரங்கனும் எங்களுக்கு ஆதரவாக இல்லை. அவர் 10 ஆண்டுகாலமாக குடும்ப பிரச்சனை காரணமாக எங்களுடன் பேசுவதில்லை. என் பெற்றோர் இருவரும் சண்டை போடும் போது அவர் ஈடுபடாமல் இருந்து வந்தார். என் பெற்றோர் பேசக்கொள்வதே இல்லை அதனால் அவர்களுக்குள் சண்டை இல்லை. என் தாத்தா பாட்டிக்கு 3 ஆண் பிள்ளைகள் இருந்தாலும் அவர்கள் தனியாக குடும்பம் நடத்தி வருகிறார்கள் என்றால் சரிதான். என் தாத்தா அவருக்கு கிடைத்த 1.74 செண்டில் தன்னுடைய பாகத்திற்கு 34 செண்டை நிறுத்திக் கொண்டு 3 பிள்ளைகளுக்கும் சமமாக பாகம் பிரித்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான். என் தாத்தா என் குடும்பத்திற்காக எப்போது ஆதரவாக இருந்து வருகிறார் என்றும், நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

தாவா சொத்துக்கள் அரசு என் தாத்தாவிற்கு பட்டா மூலம் வழங்கப்பட்ட சொத்துக்கள் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. என் தாத்தா 44 செண்டை முகமது பாரூக் என்பவரிடம் 4.10.2007ல் கிரையம் பெற்றுள்ளார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. தாவா சொத்தினை அரசு ஒப்படைவு மூலமும் அவர் தனிப்பட்ட முறையில் கிரையம் பெற்றும் அவர் அனுபவித்து வந்த சொத்து என்றால் சரியல்ல. அந்த சொத்தினை தான் வா.சா.ஆ.1 முன்னிலைக்கு அவர் பாகம் பிரித்துக் கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

நான் பள்ளிப்படிப்பை என்னுடைய ஊருக்கு அருகில் உள்ள நந்திமங்கலத்தில் படித்தேன். 1 செண்டு ரூ- 10 ஆயிரம் என்று எதன் அடிப்படையில் சொல்கிறேன் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. என் தகப்பனார் 2ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுக்கும் போது நானும், என் சகோதர சகோதரிகளும் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு சென்றிருந்தோம் என்றால் சரியல்ல. அந்த கிரையப் பத்திரத்தில் என் தாத்தா சாட்சி கையெழுத்து போட்டுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. எங்கள் ஊரைச் சேர்ந்த சின்னதம்பி மகன் மொட்டையன் என்பவர் வயதில் மூத்த பெரிய மனிதர் என்றால் அதைப்பற்றி தெரியாது.

என் அப்பா குடிகாரர், குடும்பத்தை பராமரிக்கவில்லை என்பது குறித்து என் தாயார் ஜீவனாம்ச வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதி தாவா சொத்து பூர்வீக சொத்து என்று ஒப்புக் கொண்டதாக என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் நான் கூறியிருந்த போதிலும் அவருடைய எதிருரையில் எந்த பாராவில் ஒப்புக் கொண்டுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. நான் கூறுவது போல் 2ம் பிரதிவாதி அவ்வாறு ஒப்புக் கொள்ளவில்லை என்றும், நான் தவறாக என் வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. என் தாத்தா, அவரின் தனிப்பட்ட சொத்தை என் அப்பாவிற்கு பாகம் பிரித்துக் கொடுத்ததால் அச்சொத்து என் தகப்பனாரின் தனிப்பட்ட சொத்து என்று சொன்னால் சரியல்ல.

என் தகப்பனாருக்கு 3ம் நபருக்கு விற்பனை செய்தது செல்லும் என்றும், அது குறித்து நான் கேள்வி கேட்ட முடியாது என்றால் சரியல்ல. குடும்ப சவரட்சணைக்காகவும், கல்வி கடனை அடைப்பதற்காகவும் என் அப்பா கிரையம் எழுதிக் கொடுத்தார் என்றால் சரியல்ல. தாவா சொத்து 2ம் பிரதிவாதி கிரையம் பெற்ற பிறகு பட்டா அவர் பெயரில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நாளது தேதி வரை 2ம் பிரதிவாதி தான் தாவா சொத்தை அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. நாங்கள் 20.8.2022ல் மறுகிரையம் கேட்டு 3ம் பிரதிவாதி தர மறுத்ததால் என் அப்பாவின் துணைக்கொண்டு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்து இவ்வழக்கை நடத்துகிறேன் என்றால் சரியல்ல. என் அப்பாவின் துணைக்கொண்டு தான் இவ்வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல.

2ம் பிரதிவாதி வெளியூர் என்பதால் அவரை மிரட்டி வருகிறோம் என்றால் சரியல்ல. பொய் வழக்கு என்பதால் 2ம் பிரதிவாதிக்கு சிறப்பு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

ஓம்/- சங்கீதா

Taken down by me in Open Court read over to the witness and knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali.
Additional District Judge,
Tiruvannamalai.